Teachingninja.in

Latest Govt Job updates

Private Job updates

Free Mock tests available

Visit - teachingninja.in

# TN TRB
# Grad. Teacher

## Previous Year Paper
## (Tamil)
## 04 Feb, 2024

Teachingninja.in

# GAT 2023

வினாத் தொகுப்பிலுள்ள பக்கங்களின் எண்ணிக்கை : **32**
No. of pages in Question Booklet :

Question Booklet Series **A**

Question Booklet Serial No. 13749

| | |
|---|---|
| 1. தேர்வு எண் (தேர்வு அனுமதி சீட்டில் உள்ளவாறு)<br>Roll No. (As in Hall ticket) | |
| 2. பாடம்<br>Subject | **001 – TAMIL** |
| 3. OMR விடைத்தாள் எண் (விண்ணப்பதாரரே நிரப்ப வேண்டும்)<br>OMR Answer Sheet No. (To be filled in by the candidate) | |
| 4. விண்ணப்பதாரரின் பெயர் (விண்ணப்ப படிவத்தில் நிரப்பியுள்ளபடி)<br>Candidate's Name (As given in Application form) | |
| 5. விண்ணப்பதாரரின் கையொப்பம் (விண்ணப்ப படிவத்தில் நிரப்பியுள்ளபடி)<br>Candidate's Signature (As given in Application form) | |
| 6. கண்காணிப்பாளரின் கையொப்பம்<br>Invigilator's Signature | |

இந்த வினாத்தாளில் 180 கொள்குறிவகை வினாக்கள் உள்ளன. இந்த வினாத் தொகுப்பானது இரு பகுதிகளை கொண்டது. **பகுதி-''அ''**-வில் 30 வினாக்கள் உள்ளன. வினா எண் 1 முதல் 20 வரை இரண்டு மதிப்பெண் வினாக்களும், 21 முதல் 30 வரை ஒரு மதிப்பெண் வினாக்களும் கொண்டுள்ளது. **பகுதி-''ஆ''** 150 ஒரு மதிப்பெண் வினாக்களைக் கொண்டுள்ளது. விண்ணப்பதாரர் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். தவறான விடைகளுக்கு மதிப்பெண் குறைக்கப்பட மாட்டாது.

This booklet contains 180 multiple choice questions. This Question Booklet is made up of 2 Parts. Part "A" contains 30 questions (Q. No. 1 to 30). Q. No. 1 to 20 is of 2 marks each. Question No. 21 to 30 is of 1 mark each. Part "B" contains 150 questions (Q. No. 31 to 180). Each question is of 1 mark each. There is no negative marking for wrong answer.

அரசாணை எண் (Ms) எண் 49, மனித வளம் (M) துறை நாள் 23.05.2022 -ன்படி மாற்று திறனாளிகள் கட்டாய தமிழ் தேர்விலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர்.

As per G.O. (Ms) No. 49, Human Resources (M) Department, dated 23.05.2022 differently abled candidates are exempted from the Compulsory Tamil Language eligibility test.

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட கால அளவு | பொது தேர்வர்கள் | 210 நிமிடங்கள் |
| | மாற்றுத்திறனாளி தேர்வர்கள் | 240 நிமிடங்கள் |
| Allotted time | General candidates | 210 minutes |
| | Differently abled candidates | 240 minutes |

**(இறுதிப் பக்கமான பக்கம் எண் 31, 32 ல் தரப்பட்டுள்ள தமிழ் மற்றும் ஆங்கில வழி குறிப்புகளை படிக்கவும்)**

Teachingninja.in

SPACE FOR ROUGH WORK



Teachingninja.in

## PART - A

1. 'கிடந்த' - என்ற சொல்லின் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

(A) கிடந்து + அ

(B) கிட + ந்(த்) + த

(C) கிட + ந் + த் + அ

(D) கிட + த் (ந்) + த் + அ

2. விடுபட்ட சொற்களைக் கண்டுபிடிக்கவும் :

இரத்தலும் __________ போலும் கரத்தல் __________ தேற்றாதார் மாட்டு.

(A) சாதலே, இம்மையும்

(B) வாழ்தலே, மறத்தலும்

(C) ஈதலே, கனவிலும்

(D) காத்தலே, இன்மையும்

3. செந்தாமரை → இச்சொல்லின் சரியான புணர்ச்சி விதிகளைத் தேர்ந்தெடுக்கவும் :

(A) ஈறுபோதல் + இனமிகல்

(B) ஈறுபோதல் + ஆதிநீடல்

(C) ஈறுபோதல் + தன்னொற்று இரட்டல்

(D) ஈறுபோதல் + முன்னின்ற மெய் திரிதல்

4. முரண்படு மெய்ம்மை என்ற சொல் உணர்த்துவது யாது ? சரியான விடையைக் காண்க.

(A) முரண்படுவது போல் முரண்படாத மெய்ம்மை

(B) முரண்படாதது போல் முரண்படுகிற மெய்ம்மை

(C) முரண் தொடை தொடுக்கப் பெறும் மெய்ம்மை

(D) எதிர்ச் சொல்லாக அமையப் பெறும் மெய்ம்மை

5. பொருத்துக :

| | அசைகள் | வாய்பாடு |
|---|---|---|
| (அ) | நேர் நேர் நிரை | (1) புளிமாங்காய் |
| (ஆ) | நிரை நிரை நேர் | (2) கூவிளங்கனி |
| (இ) | நிரை நேர் நேர் | (3) தேமாங்கனி |
| (ஈ) | நேர் நிரை நிரை | (4) கருவிளங்காய் |
| | | (5) தேமாங்காய் |

| | (அ) | (ஆ) | (இ) | (ஈ) |
|---|---|---|---|---|
| (A) | (3) | (1) | (4) | (5) |
| (B) | (4) | (2) | (1) | (3) |
| (C) | (3) | (4) | (2) | (1) |
| (D) | (3) | (4) | (1) | (2) |

6. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல் :

வாழை இலைக்கு தமிழர் இடமுண்டு தனித்த பண்பாட்டில்

(A) வாழை இலைக்கு பண்பாட்டில் தமிழர் தனித்த இடமுண்டு

(B) வாழை இலைக்கு தனித்த பண்பாட்டில் இடமுண்டு தமிழர்

(C) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.

(D) தமிழர் தனித்த பண்பாட்டில் இடமுண்டு வாழை இலைக்கு.

7. கீழ்க்கண்ட தொடர் எதனைக் குறிக்கிறது ?

பொசுக்குகிறது வெயில்.

(A) எழுவாய்த் தொடர்

(B) வினைமுற்றுத் தொடர்

(C) விளித் தொடர்

(D) பெயரெச்சத் தொடர்



Teachingninja.in

8. 'மயலுறுத்து கின்ற இனிய வாசனையுடன் வா' - இத்தொடரில் கோடிட்ட சொல் எவ்விதிப்படி புணர்ந்துள்ளது ?

(A) 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்'

(B) 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே'

(C) '' 'ல, ள' வேற்றுமையில் 'ற, ட' வும்''

(D) 'மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்'.

9. அமைச்சருக்குரிய கடமைகள் என, ''நன்று, தீது, இவற்றை ஆராய்தல்; அதுமட்டுமின்றி அன்பும், அறனும் தவறாது காக்க வேண்டும்'' என்று குறிப்பிடும் சங்க நூல் எது ?

(A) மதுரைக் காஞ்சி

(B) புறநானூறு

(C) கலித்தொகை

(D) சிறுபாணாற்றுப்படை

10. ''உணர்வு பொங்கி கவிதை படைக்கும் நேரங்களில் தடையாக விளங்கும் யாப்பு எளிதாக வடிவம் கொள்ள வித்திட்ட கவிஞர் யார் ?''

(A) நப்பூதனார்

(B) இளங்கோவடிகள்

(C) பாரதியார்

(D) பாரதிதாசன்

11. தவறான இணையைத் தேர்வு செய்க :

| | | | |
|---|---|---|---|
| (A) | அன்மொழித் தொகை | - | சிவப்புச்சட்டை பேசினார் |
| (B) | பண்புத் தொகை | - | வட்டத்தொட்டி |
| (C) | உவமைத் தொகை | - | முறுக்கு மீசை வந்தார் |
| (D) | உம்மைத் தொகை | - | அண்ணன் தம்பி |

12. சரியான விடையைத் தேர்வு செய்க :

(1) மா.பொ. சிவஞானம் சிலம்புச் செல்வர் என்று போற்றப்படுபவர்.

(2) சட்ட மேலவைத் தலைவராகப் பதவி வகித்துள்ளார்.

(3) பாரத மணி, கிராம ஊழியன் ஆகிய இதழ்களில் பணிபுரிந்தார்.

(A) கூற்று (1) மற்றும் (3) சரி

(B) கூற்று (1), (2) சரி

(C) கூற்று (3) மட்டும் சரி

(D) கூற்று (1) மட்டும் சரி

13. வஞ்சப்புகழ்ச்சி அணிக்குப் பொருத்தமான குறளைக் கண்டறிக :

(A) தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்தொழுக லான்.

(B) சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்.

(C) மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாம்கண்ட தில்.

(D) கரப்பிடும்பை இல்லாரைக் காணின் திரப்பிடும்பை
எல்லாம் ஒழுங்கு கெடும்.



Teachingninja.in

14. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (அ) | வினையடி விகுதியுடன் சேர்வது | (1) | முதனிலை திரிந்த தொழிற் பெயர் |
| (ஆ) | விகுதி பெறாத வினைப் பகுதி | (2) | விகுதி பெற்ற தொழிற்பெயர் |
| (இ) | கேடு, சூடு | (3) | முதனிலைத் தொழிற்பெயர் |
| (ஈ) | எண், காலம், இடம், பால் உணர்த்தாமல் வருவது | (4) | விகுதி பெறாத தொழிற்பெயர் |
| | | (5) | தொழிற்பெயர் |

| | (அ) | (ஆ) | (இ) | (ஈ) |
|---|---|---|---|---|
| (A) | (2) | (3) | (1) | (5) |
| (B) | (4) | (2) | (3) | (1) |
| (C) | (3) | (5) | (4) | (2) |
| (D) | (2) | (4) | (5) | (1) |

15. துள்ளாத சீர்கள் தாழ்வாக வரும் யாப்பின் ஓசை - யாது ?

(A) கலிப்பா

(B) வஞ்சிப்பா

(C) வெண்பா

(D) ஆசிரியப்பா

16. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (அ) | பிழையா நன்மொழி | (1) | மதுரைக் காஞ்சி |
| (ஆ) | பிறர் நோயும் தம் நோய் போல் | (2) | புறநானூறு |
| (இ) | செல்வத்துப் பயனே ஈதல் | (3) | அகநானூறு |
| (ஈ) | நன்றும் தீதும் ஆய்தலும் | (4) | கலித்தொகை |
| | | (5) | நற்றிணை |

| | (அ) | (ஆ) | (இ) | (ஈ) |
|---|---|---|---|---|
| (A) | (3) | (2) | (5) | (4) |
| (B) | (1) | (3) | (4) | (2) |
| (C) | (5) | (4) | (2) | (1) |
| (D) | (2) | (5) | (3) | (4) |

17. ஓர் இடத்திற்கு வருபவரின் வருகையை உறுதி செய்யும் பொருட்டு வழுவாகக் கூறும் வழுவமைதியின் பெயர் யாது ?

(A) இட வழுவமைதி

(B) கால வழுவமைதி

(C) பால் வழுவமைதி

(D) திணை வழுவமைதி



Teachingninja.in

18. சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும் :

(1) 'நீரற வறியாக் கரகத்து' என்ற புறநானூற்றுப் பாடலடியில் கரகம் என்ற சொல் இடம்பெறுகிறது.

(2) சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய பதினொருவகை ஆடல்களில் குடக் கூத்து என்ற ஆடலும் குறிப்பிடப்படுகிறது.

(A) கூற்று (1) மட்டும் சரி, (2) -வது கூற்று தவறு

(B) கூற்று (1) மற்றும் (2) -ம் சரி

(C) கூற்று (1) மற்றும் (2) -ம் தவறு

(D) கூற்று (2) மட்டும் சரி, (1) -வது கூற்று தவறு

19. பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் கனிச்சாறு (தொகுதி-1) தொகுப்பிலிருந்து இரு வேறு தலைப்பில் உள்ள பாடல்கள் எது ?

(A) பாவியக்கொத்து, நூறாசிரியம்

(B) கனிச்சாறு, எண்சுவை எண்பது

(C) மகபுகு வஞ்சி, பள்ளிப்பறவைகள்

(D) தமிழ்த்தாய் வாழ்த்து, முந்துற்றோம் யாண்டும்

20. 'அடிகள் நீரே அருளுக' - யார், யாரிடம் கூறியது ?

(A) அரும்பத உரைகாரர் அடியார்க்கு நல்லாரிடம் கூறியது.

(B) அடியார்க்கு நல்லார் அரும்பத உரைகாரரிடம் கூறியது.

(C) இளங்கோவடிகள் சீத்தலைச் சாத்தனாரிடம் கூறியது.

(D) சீத்தலைச் சாத்தனார் இளங்கோவடிகளிடம் கூறியது.

21. 'மா' - என்ற சொல்லின் இரு பொருள் தருக.

(A) மாமரம், அம்மா

(B) அம்மா, பூ

(C) பெரியது, விலங்கு

(D) சிறியது, நிலம்

22. வட்டார மொழி, கொச்சை மொழி, பிறமொழி சொற்கள் இடம்பெறாத தொடரினைக் கண்டறிக.

(A) என்னொட பிரண்டு சுப்பையா என்று பெயர் காலேஜ்ல படிக்கான். விடுமுறைக்கு வந்திருக்கான்

(B) என் நண்பன் சுப்பையான்னு பெயர் கல்லூரியில் படிக்கிறான். விடுமுறைக்கு வந்திருக்கான்

(C) என் நண்பன் சுப்பையா என்னும் பெயருடையவன் கல்லூரியில் படிக்கின்றான். விடுமுறைக்கு வந்துள்ளான்.

(D) என் நண்பன் சுப்பையா என்னும் பெயருடையவன் காலேஜ்ல படிக்கின்றான். லீவுக்கு வந்துள்ளான்.

23. ''போலச் செய்தல்'' பண்பு எக்கலையின் ஆட்டம் ?

(A) புலி ஆட்டம்

(B) பொய்க்கால் குதிரை ஆட்டம்

(C) தப்பாட்டம்

(D) கரகாட்டம்



Teachingninja.in

24. ஜெயகாந்தன் படைப்புகளுள் திரைப்படமான படைப்பு எது ?

(A) ஊருக்கு நூறு பேர்

(B) குருபீடம்

(C) ஒரு பிடி சோறு

(D) இன்னும் ஒரு பெண்ணின் கதை

25. ''கரிசல் மண்ணின் வாழ்க்கையை''..... கி. ராஜநாராயணனுக்கு முன் எழுதத் தொடங்கிய படைப்பாளி யார் ?

(A) பா. செயப்பிரகாசம்

(B) பூமணி

(C) கு. அழகிரிசாமி

(D) சோ. தர்மன்

26. 'பிழையா நன்மொழி' என்று வாய்மையைக் கூறும் நூல் எது ?

(A) திருக்குறள்

(B) நற்றிணை

(C) ஐங்குறுநூறு

(D) புறநானூறு

27. பொருத்தமில்லாததைக் கண்டறிக.

(A) சிறுகதைத் தொகுப்பு - இனிப்பும் கரிப்பும்

(B) நாவல் - புதிய வார்ப்புகள்

(C) குறும்புதினம் - பிரளயம்

(D) புதினம் - உன்னைப் போல் ஒருவன்

28. கல்வியும், செல்வமும் பெற்ற பெண்கள் விருந்தும் ________ செய்வதாகக் கம்பர் குறிப்பிட்டுள்ளார்.

(A) மருந்தும்

(B) ஈகையும்

(C) ஆற்றலும்

(D) வீரமும்

29. திருத்தணிகையுலா குறிப்பிடும் ஐம்பெருங்காப்பிய வைப்புமுறை யாது ?

(A) சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி

(B) சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி

(C) சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி

(D) சிலப்பதிகாரம், வளையாபதி, மணிமேகலை, குண்டலகேசி, சீவகசிந்தாமணி

30. குறில் - நெடில் மாற்றம் உணர்ந்து, கோடிட்ட சொற்களுக்குப் பொருத்தமான பொருளைத் தேர்க.

| | வளி | வாளி |
|---|---|---|
| (A) | வலித்தல் | காற்று |
| (B) | காற்று | பாத்திரம் |
| (C) | காற்று | அம்பு |
| (D) | மகிழ்ச்சி | பாத்திரம் |



Teachingninja.in

## PART - B

31. ல,ள,ழ எனும் இம்மூன்று ஒலிகளும் ________.

(A) தொடரொலிகள்

(B) வருடொலிகள்

(C) தடையொலிகள்

(D) பிரிவளி ஒலிகள்

32. ஒலி தனித்தோ, தொடர்ந்தோ பொருள் தருவது ________ ஆகும்.

(A) ஒலியன்

(B) சொல்லுருபன்

(C) ஒலியசை

(D) மாற்றொலி

33. தென்பாண்டி நாட்டார் 'ஆ'வினை எவ்வாறு அழைப்பர் ?

(A) பசு

(B) பெற்றம்

(C) தள்ளை

(D) எலுவன்

34. தனிநிலை உருபனோடு சேர்ந்து இயங்கும் ஆற்றலுடைய உருபன் :

(A) குறைப்புருபன்

(B) கட்டுநிலை உருபன்

(C) இரட்டிப்பு உருபன்

(D) மாற்றீட்டு உருபன்

35. பாடலின் முதலிலும் இறுதியிலும் 'கு' என்ற எழுத்து வர நடுவில் 'ஊருடையான்' என்ற சொல் அமைத்து வெண்பா புனைந்தவர் :

(A) துறைமங்கலம் சிவப்பிரகாசர்

(B) குமரகுருபரர்

(C) தம்பிரான்

(D) வேங்கடத்துறைவன் கவிராயர்

36. ''விருந்தெதிர் கொள்ளவும் பொய்சூள் அஞ்சவும்,

அரும் பெறல் புதல்வனை முயங்கக்-காணவும்''

- இவ்வரிகள் இடம்பெற்ற நூல் எது ?

(A) நற்றிணை

(B) கலித்தொகை

(C) அகநானூறு

(D) குறுந்தொகை

37. ''பிறந்து தவழ் கற்றதன் தொட்டு சிறந்தநன்

நாடு செகிற் கொண்டு நாள்தொறும் வளர்ப்ப''.

-இவ்வரிகள் யாரைச் சிறப்பிக்கின்றது ?

(A) தொண்டைமான் இளந்திரையன்

(B) கணைக்கால் இரும்பொறை

(C) நலங்கிள்ளி

(D) கரிகால் வளவன்



Teachingninja.in

38. மனைக்கு விளக்கு ஆகிய வாணுதல் கணவன்

முனைக்கு வரம்பு ஆகிய வென்வேல் நெடுந்தகை''

- பாடல் கூறும் புறத்திணை யாது ?

(A) தும்பைத் திணை

(B) வாகைத் திணை

(C) வஞ்சித் திணை

(D) பாடாண் திணை

39. பதிற்றுப்பத்தில் மூன்றாம் பத்து யார், யாரைப் பாடியது ?

(A) காப்பியாற்றுக் காப்பியனார் நார்முடிச்சேரலைப் பாடியது.

(B) பரணர் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பாடியது.

(C) பாலைக் கொதமனார் செல்கெழுகுட்டுவனைப் பாடியது.

(D) அரிசில்கிழார் பெருஞ்சேரல் இரும்பொறையைப் பாடியது

40. ''கார்த்திகைச் சாற்றில் கழி விளக்கு'' என விளக்கேற்றும் நிகழ்வைக் குறிப்பிடும் நூல் எது ?

(A) கார் நாற்பது

(B) களவழி நாற்பது

(C) இனியவை நாற்பது

(D) இன்னா நாற்பது

41. ஆனை மலை, அழகர் மலை, குடுமியா மலை முதலிய இடங்களில் உள்ள கல்வெட்டுக்களில் இடம்பெற்ற எழுத்துக்கள் யாவை ?

(A) வட்ட எழுத்துக்கள்

(B) பிராமி எழுத்துக்கள்

(C) பிராகிருத எழுத்துக்கள்

(D) கிரந்த எழுத்துக்கள்

42. தனுக் கோட்டம், நமன் கோட்டம், சக்கரக் கோட்டம் முதலிய கோட்டங்கள் இடம் பெறும் நூல் யாது ?

(A) பாச வதைப் பரணி

(B) தக்க யாகப் பரணி

(C) கலிங்கத்துப் பரணி

(D) மோக வதைப் பரணி

43. குரல் வளை தடையொலி அதிகமாகப் பயின்று வரும் திராவிட மொழிக் குடும்ப மொழி யாது ?

(A) கோண்டா, குயி, குவி

(B) மால்டா, தேவாங்கா, கௌடா

(C) படகா, துளு, கொடகு

(D) தோடா, கோடா, மால்டா

44. நலிபு வண்ணம் என்று தொல்காப்பியரால் குறிக்கப் பெறும் எழுத்து யாது ?

(A) உயிர் எழுத்து

(B) ஆய்த எழுத்து

(C) மெய் எழுத்து

(D) உயிர் மெய் எழுத்து



Teachingninja.in

45. செயப்படு பொருள் ஏலாத 'தூங்கு' என்பது எவ்வகை வினை ?

(A) தன் வினை

(B) பிற வினை

(C) வியங்கோள்

(D) விருப்ப ஏவல் வினை

46. துணை ஒலிகள் என்பது :

(A) ஒலியனின் மாற்று வடிவம்

(B) ஒலியன் வடிவம்

(C) ஒரே ஒலியனின் மாற்று வடிவம்

(D) உருபனின் மாற்று வடிவம்

47. ஒரு குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட ஒரு வகை மக்களால் அல்லது ஒரு மனிதனால் இவ்வாறு பேசப்படுகிறது, பேசப்பட்டது என்று ஆராயும் மொழியியல் துறையைக் குறிப்பிடுக.

(A) விளக்க முறை மொழியியல்

(B) வரலாற்று முறை மொழியியல்

(C) தம்மீட்டு முறை மொழியியல்

(D) ஒப்புநிலை மொழியியல்

48. னகர விகுதி ஒருமையையும் மகர விகுதி பன்மையையும் குறிக்கும் பெயர் எது ?

(A) வினைப் பெயர்

(B) எண்ணுப் பெயர்

(C) சுட்டுப் பெயர்

(D) காலப் பெயர்

49. தமிழ் தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிகளுக்கு இடையே-யுள்ள ஒற்றுமைகளை சுட்டிக் காட்டியவர் யார் ?

(A) ஆர்டென்

(B) எல்லீஸ்

(C) கால்டுவெல்

(D) கிரிம்

50. பெரிய மண் கலத்தைக் குறிக்கும் 'காங்கு' என்ற சொல் எந்த மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு வந்தது ?

(A) ஹீப்ரு

(B) கிரேக்கம்

(C) சீனம்

(D) ஆங்கிலம்

51. ''வார் இருங் துந்தல் வயங்கிழை ஒழிய
வாரேன்; வாழிய, நெஞ்சே !''

- என்ற அடிகள் இடம்பெறும் நூல்.

(A) குறிஞ்சிப்பாட்டு

(B) முல்லைப்பாட்டு

(C) மலைபடுகடாம்

(D) பட்டினப்பாலை

52. சிறுவெண் காக்கைப் பத்து இடம்பெறும் நூல் எது ?

(A) பதிற்றுப்பத்து

(B) ஐங்குறுநூறு

(C) அகநானூறு

(D) குறுந்தொகை



Teachingninja.in

53. பாண்டியன் இலவந்திகைப் பள்ளி துஞ்சிய நன்மாறனுக்கு இளநாகனார் கூறிய கூற்று :

(A) ''நின்று நிலையியர் உலகமோடு உடனே''.

(B) இரவலர்க்கு அருங்கலம் அருகாது ஈய''

(C) இறங்கு கதிர்க் கழனிநின் இளையரும் கவர்க''.

(D) அறநெறி முதற்றே அரசின் கொற்றம்''.

54. பஞ்சுரம் என்னும் பண் எந்த நிலத்திற்குரியது ?

(A) குறிஞ்சி

(B) முல்லை

(C) மருதம்

(D) பாலை

55. ''நிலனும், நீடிய இமயமும் நீ'' என்று எத்தெய்வத்தைப் பரிபாடல் கூறுகிறது ?

(A) திருமால்

(B) சிவன்

(C) காளி

(D) துர்க்கை

56. ''நல்ல எண்ணாது சிதைத்தல் வல்லை'' என மன்னனியல்பு கூறுவது ________.

(A) இயன்மொழி

(B) பாடாண்திணை

(C) அரசவாகை

(D) குடைமங்கலம்

57. ''பெருநல் வானத்துப் பருந்து உலாய் நடப்ப, தூறுஇவர் துருகல் போல,''
- இதில் இம்பெறும் 'துருகல்' என்ற சொல்லின் பொருள் என்ன ?

(A) நெருங்கிய வீடுகள்

(B) நெருங்கிய பாறைகள்

(C) நெருங்கிய தாவரங்கள்

(D) நெருங்கிய மலைகள்

58. ஐங்குறுநூற்றில் முல்லைத்திணையைப் பாடியவர் யார் ?

(A) அம்மூவனார்

(B) பேயனார்

(C) ஓரம்போகியார்

(D) நம்பியாண்டார்

59. ''கோடல் குவிமுகை அங்கை அவிழ''
- கோடல் என்பதன் பொருள் என்ன ?

(A) செங்காந்தள்

(B) வெண் காந்தள்

(C) வெண் கொன்றை

(D) செங் கொன்றை



Teachingninja.in

60. ''மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகை இரும்பனம் பசுங்குடைப் பலவுடன் பொதிந்து'' - என்ற குறுந்தொகைப் பாடலைப் பாடியவர் ________.

(A) பூங்கணுத்திரையார்

(B) உலோச்சன்

(C) ஓரம்போகியார்

(D) சிறைக்குடி ஆந்தையார்

61. ''மாதாவுடல் சலித்தாள் வல்விளையேன்

கால்சலித்தேன்

வேதாவும் கைசலித்து விட்டானே''

- என்று பிறவிக்கு அஞ்சிப் பாடியவர் யார் ?

(A) சிவவாக்கியர்

(B) பத்திரகிரியார்

(C) பட்டினத்தார்

(D) தாயுமானவர்

62. 'பண் சுமந்த பாடல்' எனும் தொடர் இடம் பெற்ற திருவாசகப் பகுதி ________.

(A) திருவெம்பாவை

(B) திருப்பள்ளியெழுச்சி

(C) திருவம்மானை

(D) திருச்சாழல்

63. மணிமேகலையின் காதைகளில் மிகுதியும் அமைந்த யாப்பு எது ?

(A) நேரிசை ஆசிரியம்

(B) நிலைமண்டில ஆசிரியம்

(C) இணைக் குறளாசிரியம்

(D) அடிமறி மண்டில ஆசிரியம்

64. ''எல்லைக் காப்பது ஒன்றில்லையலாகி நீர் எத்துக்கு இங்கிருந்தீர் எம்பிரானீரே''

- என்ற அடியால் உணரலாகும் சைவ சமயநெறி.

(A) மகன்மை நெறி

(B) அடிமை நெறி

(C) தோழமை நெறி

(D) குரு-சீடர் நெறி

65. திருநாமப் பதிகத்தின் ஆசிரியர் யார் ?

(A) எச்.ஏ. கிருட்டினப்பிள்ளை

(B) தாயுமானவர்

(C) இராமலிங்க அடிகள்

(D) பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்

66. சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் தோரிய மகளிர் எனப்படுபவர்கள் யார் ?

(A) பாடும் பெண்கள்

(B) ஆடும் பெண்கள்

(C) பாடிக் கொண்டே ஆடும் பெண்கள்

(D) யாழ் இசைக்கும் பெண்கள்



Teachingninja.in

67. தேவர், மனிதர், விலங்குகள், பறவைகள், ஊர்வன, நீர்வாழ்வன என வில்லிபாரதத்தில் வரும் இவ்வாறும் ________ ஆகும்.

(A) முதற்பொருள்

(B) உரிப்பொருள்

(C) சரப்பொருள்

(D) அசரப்பொருள்

68. அன்ன வயற் புதுவை - என்று சிறப்பித்துக் கூறப்படும் தலம் :

(A) திருப்பெரும்புதூர்

(B) திருவரங்கம்

(C) திருவில்லிபுத்தூர்

(D) திருவேங்கடம்

69. ஒரு தொகுப்பில் உள்ள பத்துப்பாடல்களில் முதல் சொல்லை அடிவரவாகக் குறிக்கும் உத்தி இடம்பெறும் நூல் :

(A) பெரிய திருமொழி

(B) திருவாசகம்

(C) திருவிசைப்பா

(D) திருத்தாண்டவம்

70. துணையது வாய்வரும் தூயநற் கல்வி - என்னும் அடி இடம்பெறும் நூல் :

(A) திருமந்திரம்

(B) திருவிசைப்பா

(C) திருவாசகம்

(D) திருப்பல்லாண்டு

71. திருவிராமேச்சுரத்தில் வெண்பா பாடி மழை பொழியச் செய்தவர் :

(A) தாயுமானவர்

(B) குமரகுருபரர்

(C) பரஞ்சோதியார்

(D) பட்டினத்தார்

72. 'காயும் கதம் இன்மை நன்று'

- இடம்பெறும் இலக்கியம் :

(A) நாலடியார்

(B) நான்மணிக்கடிகை

(C) இன்னா நாற்பது

(D) இனியவை நாற்பது

73. 'சிவனெனுமோசை' - என்று பாடியவர் :

(A) திருநாவுக்கரசர்

(B) சுந்தரர்

(C) மாணிக்கவாசகர்

(D) திருஞானசம்பந்தர்

74. நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் 'கலியன்' என்று சுட்டப்படுபவர் :

(A) திருமங்கையாழ்வார்

(B) திருப்பாணாழ்வார்

(C) தொண்டரடிப்பொடியாழ்வார்

(D) பொய்கையாழ்வார்



Teachingninja.in

75. கந்தபுராணத்தின் முதற்பகுதி __________.

(A) தட்ச காண்டம்

(B) தேவ காண்டம்

(C) அசுர காண்டம்

(D) உற்பத்தி காண்டம்

76. இருபத்து ஐந்து அரை செய்யுட்கள் கொண்ட நூலின் பெயர் யாது ?

(A) பிரபந்த மாலை

(B) பிரபந்த தீபிகை

(C) சிதம்பரப் பாட்டியல்

(D) வெண்பா பாட்டியல்

77. நைவளம், இந்தளம் என்ற பண் சுமந்த பாடல்களால் அமைந்த முதல் பதிகம் பாடியவர் யார் ?

(A) காரைக்கால் அம்மையார்

(B) நக்கீரர்

(C) சம்பந்தர்

(D) நம்பியாண்டார் நம்பி

78. மங்கலம் இலக்கிய வகைமையில் முற்பகுதியில் அமைந்த பாடல்களின் எண்ணிக்கையைக் குறிக்கும் மங்கலம் எது ?

(A) நாண்மங்கலம்

(B) அட்டமங்கலம்

(C) பெருமங்கலம்

(D) குடைமங்கலம்

79. பாட்டுடைத் தலைவனை வாழ்த்தாது நூலை ஆக்குவித்தவனைப் பாடும் கூழடுதல் எனும் பகுதி இடம்பெறும் பரணி நூல் எது ?

(A) கலிங்கத்துப் பரணி

(B) தக்கயாகப் பரணி

(C) மோகவதைப் பரணி

(D) பாசவதைப் பரணி

80. கலிங்கத்துப் பரணியில் சுட்டப்பெறும் கலிங்கதேசம் இன்று எவ்வாறு வழங்கப்படுகிறது ?

(A) கர்னாடகா

(B) ஆந்திரா

(C) மேற்கு வங்கம்

(D) ஒரிசா

81. முல்லை நில உணவாக பெரும்பாணாற்றுப்படை எதனைச் சுட்டுகிறது ?

(A) கஞ்சி

(B) கறிசோறு

(C) பாற்சோறு

(D) கும்மாயம்

82. தோப்பி என்பதன் பொருள் __________.

(A) நெல்

(B) கம்பு

(C) கேழ்வரகு

(D) கரும்பு



Teachingninja.in

83. திருவோணத் திருநாளைப் பதிவிடும் பத்துப்பாட்டு நூல் எது ?

(A) மதுரைக்காஞ்சி

(B) குறிஞ்சிப்பாட்டு

(C) நெடுநல்வாடை

(D) முல்லைப்பாட்டு

84. ''புனையா ஓவியம் கடுப்ப'' என்று நெடுநல்வாடை குறிப்பிடும் பொருள் யாது ?

(A) கட்டில் வருணனை

(B) தலைவி வருணனை

(C) அரண்மனை வருணனை

(D) கோவலர் வருணனை

85. 'ஆரிய அரசன் பிரகத்தன்' - என்பவனுக்கு தமிழின் பெருமையை உணர்த்துவதற்காக பாடப்படும் நூல் எது ?

(A) குறிஞ்சிப்பாட்டு

(B) பட்டினப்பாலை

(C) முல்லைப்பாட்டு

(D) நெடுநல்வாடை

86. 'ஏழகத் தகர்' என்பது எந்த கால்நடையைக் குறிக்கும் ?

(A) பசுவின்கன்று

(B) எருமை

(C) ஆட்டுக்கிடாய்

(D) பூனைக்குட்டி

87. ''உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு

பலர்புகழ் ஞாயிறு கடல்கண் டாஅங்கு''
 - எனத் தொடங்கும் நூல் எது ?

(A) திருமுருகாற்றுப்படை

(B) பொருநராற்றுப்படை

(C) சிறுபாணாற்றுப்படை

(D) பெரும்பாணாற்றுப்படை

88. புல்லங்காடனார் என்னும் புலவரால் பாடப்பட்ட நூல் எது ?

(A) கைந்நிலை

(B) இன்னிலை

(C) ஏலாதி

(D) திரிகடுகம்

89. ''நேர் இறை முன்கை பற்றி, நுமர் தர,

நாடு அறி நல்மணம் அயர்கம்.''

 - என்று அக்காலத் திருமண முறையில் கைப்பிடிக்கும் சடங்கு இருந்ததை உணர்த்தும் நூல் :

(A) பட்டினப்பாலை

(B) அகநானூறு

(C) குறிஞ்சிப்பாட்டு

(D) குறுந்தொகை



Teachingninja.in

90. அகநானூற்றில் 2, 8 என முடியும் எண்களைக் கொண்ட பாடல்கள் எத்திணையைக் குறிக்கும் ?

(A) பாலை

(B) குறிஞ்சி

(C) மருதம்

(D) நெய்தல்

91. வழிப்பாதைகளை ஒரு சுற்றுலா வழிகாட்டி போல் சுவையாகக் கூறிச் செல்லும் நூல் எது ?

(A) சிறுபாணாற்றுப்படை

(B) பெரும்பாணாற்றுப்படை

(C) மலைபடுகடாம்

(D) பொருநராற்றுப்படை

92. ஏழு வள்ளல்களின் சிறப்பையும் நல்லியக்-கோடனிடம் ஒருங்கே காண்பதாகக் கூறிய புலவர் யார் ?

(A) கபிலர்

(B) நத்தத்தனார்

(C) பரணர்

(D) நப்பூதனார்

93. பதிற்றுப்பத்தில் நான்காம் பத்து பாடியவர் :

(A) பரணர்

(B) கபிலர்

(C) அரிசில்கிழார்

(D) காப்பியாற்றுக் காப்பியனார்

94. போர்க்களத்தில் ''கார்த்திகை விழா'' கொண்டாடியதைக் குறிப்பிடும் நூல் எது ?

(A) இனியவை நாற்பது

(B) இன்னா நாற்பது

(C) கார் நாற்பது

(D) களவழி நாற்பது

95. தமக்கிடையே பூ இடைப்படினும் ஓர் ஆண்டு கழிந்தது போல் வருந்தும் பறவை எது ?

(A) நீர்க்காகம்

(B) மகன்றில்

(C) வாத்து

(D) நாரை

96. மாணவர்களுக்குப் பொருள் கொடுத்துக் கற்பிக்க வேண்டும் எனக் கூறுவது எது ?

(A) சிறுபஞ்சமூலம்

(B) நான்மணிக்கடிகை

(C) நாலடியார்

(D) ஏலாதி

97. உழும் எருது இல்லாத உழவருக்கு வீணாப் போகும் நிலத்தின் ஈரம் கூட துன்பம் தரும் எனக் குறிப்பிடுவது :

(A) இனியவை நாற்பது

(B) இன்னா நாற்பது

(C) நாலடியார்

(D) ஏலாதி



Teachingninja.in

98. கற்றவருக்கு எவ்வூரும் தம்மூரே என்று கூறியவர் யார் ?

(A) விளம்பிநாகனார்

(B) பூங்குன்றனார்

(C) பூதஞ்சேந்தனார்

(D) திருவள்ளுவர்

99. தன்னிடம் புகலடைந்தவருக்கு அமிர்த-மாகவும் புகலடையாதவருக்குப் பாம்பின் நஞ்சைப் போன்றும் காணப்படுபவன் யார் ?

(A) சீவகன்

(B) கோவிந்தன்

(C) கட்டியங்காரன்

(D) சச்சந்தன்

100. ''கண்டேன் கிடந்தேன் கனவின்னிது கண்டவாறே''. - இவ்வரி எந்நூல் உருவா-வதற்குக் காரணமாக அமைந்தது ?

(A) நீலகேசி

(B) சூளாமணி

(C) வளையாபதி

(D) குண்டலகேசி

101. 'கண்மகிழ்ந்து துடிவிம்மப் புண்மகிழ்ந்து புகன்றாடின்று' என்பது யாது ?

(A) ஆளெறிபிள்ளை

(B) பிள்ளைத் தெளிவு

(C) பிள்ளையாட்டு

(D) புண்ணொடு வருதல்

102. பெயரினும் வினையினும் பின்முன்

ஓரிடத்து

ஒன்றும் பலவும் வந்து ஒன்றுவது எது ?

(A) பெயர்ச்சொல்

(B) வினைச்சொல்

(C) இடைச்சொல்

(D) உரிச்சொல்

103. ஓரடி முழுவதும் ஒரு சொல்லே வரத் தொடுப்பது ________.

(A) எதுகைத் தொடை

(B) மோனைத் தொடை

(C) செந்தொடை

(D) இரட்டைத் தொடை

104. தனியே நின்று ஒருபொருள் பயந்து முற்றுப் பெறும் செய்யுள் எவ்வாறு அழைக்கப்படுகிறது ?

(A) குளகச்செய்யுள்

(B) தொகைநிலைச் செய்யுள்

(C) முத்தகச் செய்யுள்

(D) தொடர்நிலைச் செய்யுள்



Teachingninja.in

105. பொடிபோலச் சிதறிக்கிடக்கும் சொற்களைக் கூட்டிப் பொருள் காண்பது எவ்வித பொருள்கோள் ?

(A) அடிமறிமொழிமாற்றுப் பொருள்கோள்

(B) அடிமொழிமாற்றுப் பொருள்கோள்

(C) சுண்ணமொழிமாற்றுப் பொருள்கோள்

(D) நிரல்நிறைமொழிமாற்றுப் பொருள்கோள்

106. அண்ணம் சேர்ந்த மிடற்று எழு வளியிசை கண்ணுற்று அடைய __________ பிறக்கும்.

(A) உ காரம்

(B) ய காரம்

(C) ஐ காரம்

(D) வ காரம்

107. கருவி, கருத்தா, உடன்நிகழ்வு, பொருள்களை உணர்த்தும் வேற்றுமை எது ?

(A) மூன்றாம் வேற்றுமை

(B) இரண்டாம் வேற்றுமை

(C) நான்காம் வேற்றுமை

(D) ஆறாம் வேற்றுமை

108. மகரத்தை இறுதியாக உடைய சொற்கள் பெறும் சாரியைகள் யாவை ?

(A) அத்து, இன்

(B) அற்று, வற்று

(C) ஒன், அன்

(D) நம், நும்

109. "நீட்டல் சுழித்தல்

குறில்மெய்க் கிரு புள்ளி"

- என்று குறிப்பிட்டவர் யார் ?

(A) வீரமாமுனிவர்

(B) ஐயனாரிதனர்

(C) சமண முனிவர்

(D) தொல்காப்பியர்

110. வஞ்சிக்குப் புறனாக அமைந்த திணை எது ?

(A) குறிஞ்சி

(B) முல்லை

(C) பாலை

(D) மருதம்

111. பொருத்திக் காட்டுக :

| | | | |
|---|---|---|---|
| (1) | நாற்கவிராச நம்பி | (அ) | தொன்னூல் விளக்கம் |
| (2) | புத்தமித்திரனார் | (ஆ) | அகப்பொருள் விளக்கம் |
| (3) | ஐயனாரிதனார் | (இ) | வீரசோழியம் |
| (4) | வீரமாமுனிவர் | (ஈ) | புறப்பொருள் வெண்பா மாலை |

(A) (1)-(அ), (2)-(ஈ), (3)-(ஆ), (4)-(இ)

(B) (1)-(இ), (2)-(ஈ), (3)-(ஆ), (4)-(அ)

(C) (1)-(ஆ), (2)-(இ), (3)-(ஈ), (4)-(அ)

(D) (1)-(ஈ), (2)-(இ), (3)-(ஆ), (4)-(அ)



Teachingninja.in

112. ''அருந்திறை அளப்ப ஆறிய சினத்தொடு

பெரும்பூண் மன்னன் பெயர்தலும் அதுவே''

- இக்கொளு, எத்துறையைக் குறிக்கின்றது ?

(A) பேராண் வஞ்சி

(B) முதுமொழி வஞ்சி

(C) மாராய வஞ்சி

(D) உழபுல வஞ்சி

113. ''கொடுந்திறல் உடையன சுறவேறு கொட்பதனால்

இடுங்கழி இர வகுதல்[1]

வேண்டா' என் றிசைத்திலமோ ?

கருநிறத் தெனுதொழிற் கராம்பெரி துடைமையால்

இருள்நிறத் தொகுகானல் இரவாரல்[2] என்றிலமோ ?''

-இவ்வடிகளில் அமைந்துள்ள கலிப்பாவின் உறுப்பினைக் குறிப்பிடுக.

(A) நாற்சீர் ஈரடி இரண்டு அம்போதரங்கம்

(B) நாற்சீர் ஓரடி நான்கு அம்போதரங்கம்

(C) இருசீர் ஓரடிப் பதினாறு அம்போதரங்கம்

(D) முச்சீர் ஈரடி ஒரு அம்போதரங்கம்

114. மூன்று அடியானும் முற்றுப் பெற்று அடிதோறும்

இறுதிக் கண் ஒகு சொல்லே தனிச் சொல்லாய்

வருவது

(A) வெண்டாழிசை

(B) வெண்குனை

(C) வெளிவிருத்தம்

(D) குறட்டாழிசை

115. பகைவராகிய வெட்சி மறவரின் குடலை வேலுக்கு மாலையாக அணிவித்து வீரர் மகிழ்வுடன் ஆடுதல் என்பது ________.

(A) நெடுமொழி கூறல் எனும் கரந்தைத் துறை

(B) கையறு நிலை எனும் கரந்தைத் துறை

(C) பிள்ளைப் பாட்டு எனும் கரந்தைத் துறை

(D) பிள்ளைப்பெயர்ச்சி எனும் கரந்தைத் துறை

116. 'ஒப்பிலக்கியம் என்பது இலக்கியங்களுக்கு இடையேயான உறவுகளை ஒரு பக்கமும், பிற துறைகளை ஒருபக்கமுமாக ஒப்பிட்டுக் கூறுவது' என்று கூறியவர் யார் ?

(A) ரெனே வெல்லக்

(B) ஐ.ஏ. ரிச்சர்ட்ஸ்

(C) ஜார்ஜ் தாம்ஸசன்

(D) ஹெச்.ஹெச். ரீமாக்



Teachingninja.in

117. மூலப் பிரதியிலுள்ள பொருண்மைக்கு இயன்ற வரையிலும் நெருக்கமாக அமையும் வடிவத்தை எவ்வாறு அழைப்பர் ?

(A) நிகரன்

(B) நிகர்மை

(C) கடின மொழிபெயர்ப்பு

(D) ஒலி பெயர்ப்பு

118. ஆல்பர்ட் காமுஸ் எழுதிய 'தி அவுட் சைடர்' நாவல் 'அந்நியன்' எனத் தமிழில் யாரால் மொழிபெயர்க்கப்பட்டது ?

(A) வெ. ஸ்ரீராம்

(B) சி.ஆர். கண்ணன்

(C) அ. கிருஷ்ணமூர்த்தி

(D) இரா. பாஸ்கரன்

119. 'கடலில் மூழ்குபவனுக்கு மிதவையாக ஒரு மரக்கட்டை கிடைப்பது போல நமக்குக் கிடைத்திருக்கிறது ஒப்பிலக்கியம்' எனக் கூறியவர் யார் ?

(A) ச.வே. சுப்பிரமணியன்

(B) வ.அய். சுப்பிரமணியன்

(C) க. கைலாசபதி

(D) கா. சிவத்தம்பி

120. தொ.மு.சி. ரகுநாதன் எவ்விருவரை ஒப்பிட்டு ஆய்ந்துள்ளார் ?

(A) பாரதியும் ஷெல்லியும்

(B) கீட்ஸையும் பாரதியும்

(C) வால்ட் விட்மனும் பாரதியும்

(D) பாரதியும் பைரனும்

121. "பேய் போல் திரிந்து பிணம் போல் கிடந்து பெண்ணைத்
தாய் போல் நினைத்துத் தவம் முடிப்பது
எக்காலம்"

- என்று கூறியவர் யார் ?

(A) பட்டினத்தார்

(B) பத்திரகிரியார்

(C) குதம்பைச் சித்தர்

(D) பாம்பாட்டிச் சித்தர்

122. பல்லார் உறையின் பதி நன்று மாசறக் கற்பின் ஒருவர் மதி நன்று எனக் கூறுபவர் யார் ?

(A) கணித மேதாவியார்

(B) முன்றுறையனார்

(C) விளம்பி நாகனார்

(D) மாறன் பொறையனார்

123. அடியார்களின் ஒழுக்கம், காலை துதி, உண்மை வற்புறுத்தல் எனும் உட்பிரிவுகள் இடம் பெறும் நூல் எது ?

(A) இரட்சணிய மனோகரம்

(B) இரட்சணிய யாத்ரீகம்

(C) பெரியபுராணம்

(D) மணிமேகலை



Teachingninja.in

124. தக்கோன் எனத் திரி

- எனும் தொடரைக் கூறியது யார் ?

(A) ஔவையார்

(B) மணக்குடவர்

(C) பாரதியார்

(D) பரிமேலழகர்

125. ''யானையின் மன்னரைக் காண்ட

னனிமின்னா

ஊனைத்தின் நூனைப் பெருக்குதல்

முன்னின்னா''

-இவ்வடிகள் இடம் பெற்ற நூல் எது ?

(A) இன்னா நாற்பது

(B) கார் நாற்பது

(C) இனியவை நாற்பது

(D) களவழி நாற்பது

126. மணி நீரிலஞ்சி என்பது :

(A) வறண்ட பொய்கை

(B) பளிங்கு போலும் நீரையுடைய பொய்கை

(C) நீர் நிரம்பிய பொய்கை

(D) தாமரை அடர்ந்த பொய்கை

127. சூளாமணி காப்பியத்திற்கு உரையாசிரியர் யார் ?

(A) ஆறுமுக நாவலர்

(B) இளவழகனார்

(C) பொ.வே. சோமசுந்தரனார்

(D) இரா. சுந்திரம் பிள்ளை

128. திருவள்ளுவ மாலையில் திருக்குறளைக் குறிப்பதாக மிகுதியும் கையாளப்பெற்ற பெயர் ________.

(A) முதுமொழி

(B) வள்ளுவம்

(C) முப்பால்

(D) பொய்யாமொழி

129. வெண்பா யாப்பின் அனைத்து வகைகளும் இடம்பெற்ற பதினெண் கீழ்க்கணக்கு நூல் எது ?

(A) ஆசாரக் கோவை

(B) நாலடியார்

(C) பழமொழி

(D) திரிகடுகம்

130. 'வெல்வது வேண்டின் வெகுளி விடல்' - என்று அறிவுறுத்தும் நூல் யாது ?

(A) சிறுபஞ்சமூலம்

(B) திருக்குறள்

(C) நான்மணிக்கடிகை

(D) நாலடியார்



Teachingninja.in

131. மூவருலாவை முதன்முதலாக பதிப்பித்து வெளியிட்டவர் யார் ?

(A) உ.வே. சாமிநாதையர்

(B) அ. கோபாலையர்

(C) பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்

(D) மு. இராகவ ஐயங்கார்

132. பதிகம் என்னும் இலக்கிய வகையின் இலக்கணத்தைக் கூறும் நூல்களுள் ஒன்று ____________.

(A) நவநீதப் பாட்டியல்

(B) வெண்பாப் பாட்டியல்

(C) பன்னிரு பாட்டியல்

(D) இலக்கண விளக்கப் பாட்டியல்

133. பல்வேறு நெல் வகைகளைக் கூறும் சிற்றிலக்கிய நூல் எது ?

(A) நந்திக் கலம்பகம்

(B) முக்கூடற் பள்ளு

(C) திருக்குற்றாலக் குறவஞ்சி

(D) திருக்கைலாய ஞான உலா

134. அறிவு வெறி பித்து கொண்ட ஒரு புலவரை வெல்ல நீரோட்டக யமக அந்தாதி பாடியவர் ____________.

(A) திருவாரூர் சிவப்பிரகாசர்

(B) துறைமங்கலம் சிவப்பிரகாசர்

(C) சிதம்பரம் சிவப்பிரகாசர்

(D) பண்டித சிவப்பிரகாசர்

135. நாடகத்தன்மை வாய்ந்த சிற்றிலக்கியங்களுள் ஒன்று ____________.

(A) பரணி

(B) பள்ளு

(C) பிள்ளைத்தமிழ்

(D) உலா

136. இலக்கண, இலக்கியங்கள் அனைத்தையும் பட்டியலிடும் நூல் எது ?

(A) சோழ மண்டல சதகம்

(B) தக்கயாகப் பரணி

(C) மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

(D) தமிழ் விடு தூது

137. இராச ராச சோழன் உலாவில் இடம்பெறும் கண்ணிகள் எத்தனை ?

(A) 191

(B) 291

(C) 391

(D) 491

138. எந்த நூலில் போர்க் களத்தில் எழுநூறு யானைகளைக் கொன்றவனுக்குப் பரணி பாடப்பெறும் என்ற கருத்துரைக்கிறது ?

(A) இலக்கண விளக்கப் பாட்டியல்

(B) பிரபந்த தீபிகை

(C) பிரபந்த மரபியல்

(D) பன்னிரு பாட்டியல்



Teachingninja.in

139. நகுல மலைக் குறவஞ்சி நூலை இயற்றி-யவர் பெயர் என்ன ?

(A) விசுவநாத சாஸ்திரியார்

(B) ஆறுமுக நாவலர்

(C) பரிதிமாற்கலைஞர்

(D) பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார்

140. மொழி முதலெழுத்துகளால் பாடல்களைத் தொடங்கும் கோவை எது ?

(A) ஒருதுறைக் கோவை

(B) ஐந்திணைக் கோவை

(C) வருக்கக் கோவை

(D) திருக்கோவை

141. சிறுகதை அமைப்பைப் பெற்ற முதல் நூல் எது ?

(A) பஞ்சதந்திரக் கதைகள்

(B) மங்கையர்க்கரசியின் காதல்

(C) பரமார்த்த குரு கதைகள்

(D) அபிநவக்கதைகள்

142. கதைகள் கதைக்கருவால், பண்பால், உணர்ச்சியினால் சிறப்படைவன என்று கூறியவர் யார் ?

(A) ஸ்டீவன்சன்

(B) பிரபஞ்சன்

(C) ஹட்சன்

(D) கா. சிவத்தம்பி

143. 'ஒரே மூச்சில் படித்து முடித்தற்குரிய கதையே சிறுகதை' - என்று குறிப்பிட்டவர் யார் ?

(A) வில்லியம் என்றி அட்சன்

(B) எட்கார் ஆ லென்போ

(C) கு. அழகிரிசாமி

(D) லா.ச. ராமாமிர்தம்

144. யாருடைய படைப்புகள் ஆங்கிலப்பெண் நாவலாசிரியை ஜேன் ஆஸ்டின் என்பவரை நினைவூட்டுகின்றன ?

(A) அம்பை

(B) ஆர். சூடாமணி

(C) அ. வெண்ணிலா

(D) ராஜம் கிருஷ்ணன்

145. யாருடைய கதைகளில் வஞ்சப் புகழ்ச்சி அணி சிறந்து விளங்கும் ?

(A) அகிலன்

(B) அண்ணா

(C) விந்தன்

(D) ஜெயகாந்தன்

146. விவேக சிந்தாமணி மாத இதழில் தொடர் கதையாக வெளிவந்த புதினம் எது ?

(A) கமலாம்பாள் சரித்திரம்

(B) பிரேம கலாவதியம்

(C) பத்மாவதி சரித்திரம்

(D) அம்மா வந்தாள்



Teachingninja.in

**147.** யாருடைய சிறுகதைகள் 'குசிகர் குட்டிக் கதைகள்' என்ற தொகுதியாக வெளி-வந்தது ?

(A) மாதவையா

(B) வ.வே.சு. ஐயர்

(C) வீரமாமுனிவர்

(D) பி.எஸ். இராமையா

**148.** அம்மா வந்தாள் - புதினம் தொடராக வெளிவந்த இதழின் பெயர் என்ன ?

(A) சாவி

(B) ஆனந்த விகடன்

(C) கணையாழி

(D) கல்கி

**149.** 'கொட்டிச் சேதம் கூத்து' சிலப்பதிகாரத்தில் எக் காண்டத்தில் கூறப்பட்டுள்ளது ?

(A) புகார் காண்டம்

(B) மதுரைக் காண்டம்

(C) வஞ்சிக் காண்டம்

(D) கிட்கிந்தா காண்டம்

**150.** வானொலியில் நடிப்பதற்கென்றே எழுதப்-பட்ட பத்து நாடகத்தின் தொகுப்பு __________.

(A) தெள்ளாற்று நந்தி

(B) புகழ்க் கோபுரம்

(C) ஊதியதாரர்

(D) சிலை பேசிற்று

**151.** ''பாரெலாம் நமது நாட்டின், பெரும்புகழ் பரப்பி,

மக்கள் போரெலாம் ஒடுங்க வேண்டும்''
- எனப் பாடியவர்.

(A) கம்பதாசன்

(B) கண்ணதாசன்

(C) நாமக்கல் கவிஞர்

(D) வாணிதாசன்

**152.** காணிக்காரன் பழங்குடி சமுதாயத்தில் 'பிலாத்தி' என்பவர் யார் ?

(A) குடும்பத் தலைவன்

(B) ஊர்த் தலைவன்

(C) பூசாரி

(D) பங்காளி

**153.** விடுகதையின் வடிவங்களுள் ஒன்று __________.

(A) விகடப்பா

(B) சித்திரக்கவி

(C) வில்லுப்பாட்டு

(D) முடுகு

**154.** பொம்மக்கா, திம்மக்கா கதாபாத்திரங்கள் இடம்பெறும் கதைப்பாடல் எது ?

(A) முத்துப்பட்டன் கதை

(B) மதுரைவீரன் கதை

(C) தேசிங்குராஜன் கதை

(D) காத்தவராயன் கதை



Teachingninja.in

155. டாக்டர் துளசி இராமசாமி குறிப்பிடும் நாட்டுப்புற தெய்வங்களின் வகைப்பாடு-கள் எத்தனை ?

(A) 5

(B) 6

(C) 7

(D) 8

156. புதுக்கவிதையில் நெடுங்கவிதை வடிவில் வெளிவந்த படைப்பு எது ?

(A) நரகம்

(B) கோவேறு கழுதை

(C) குருக்ஷேத்திரம்

(D) காதல் கீதம்

157. ''நடசாரி'' ஓலைப் பட்டயம் எந்த விளையாட்டின் தோற்ற வளர்ச்சியைக் கூறுகிறது ?

(A) சிலம்பாட்டம்

(B) காவடியாட்டம்

(C) கரக ஆட்டம்

(D) மயிலாட்டம்

158. ''இருக்கும் வரை எல்லாம் கிடைக்கும்
வரை
இன்ப வனத்தினிலே அன்பு கிளை-
தனிலே
சிட்டுக் குருவிகள் போல் சேர்ந்து
மகிழ்ந்திடுவோம்''
- எனக் கூறும் கவிஞர் யார் ?

(A) உடுமலை நாராயண கவி

(B) கண்ணதாசன்

(C) பாபநாசம் சிவன்

(D) மருதகாசி

159. திரைத்துறையில் பட்டுக்கோட்டை கல்யாண-சுந்தரம் எப்படத்தின் மூலம் திரைப்பட உலகில் நுழைவு பெற்றார் ?

(A) படித்த பெண்

(B) ரத்தினபுரி இளவரசி

(C) குலதெய்வம்

(D) குமார் ராஜா

160. ''சுகத்தினை நான் வேண்டித் தொழுதேன்
எப்போதும்
அகத்தினிலே துன்புற் றழுதேன்''
என்று பாடிய கவிஞர் __________.

(A) பாரதியார்

(B) பாரதிதாசன்

(C) கவிமணி தேசிக விநாயகம்

(D) நாமக்கல் வெ. இராமலிங்கம்

161. 'கல்கத்தா ஜெர்னல்' என்ற இதழ் எத்தனை பக்கங்களைக் கொண்டது ?

(A) 6

(B) 12

(C) 20

(D) 8

162. தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளில் செயல்படும் தமிழ் எழுத்துரு எது ?

(A) TEN

(B) TAM

(C) TCA

(D) TAE



Teachingninja.in

163. ஆதமி (Adami) என்ற தமிழ்க் குறியீட்டு மென்பொருளை உருவாக்கியவர் __________.

(A) முனைவர் ஸ்ரீநிவாசன்

(B) முனைவர் ஈசுவரன்

(C) முனைவர் மா.பா. குருசாமி

(D) முனைவர் அருணாச்சலம்

164. 'பாடினியார்' வலைப்பூ யாருக்காக உருவாக்கப்பட்டுள்ளது ?

(A) ஆண்கள்

(B) பெண் குழந்தைகள்

(C) இளைஞர்

(D) பெண்கள்

165. கணினியில் செய்திகளின் சங்கமம் என்று அழைக்கப்படுவது எது ?

(A) திரட்டி

(B) தமிழ்க்கணிமை

(C) திரட்டி.காம்

(D) வலைப்பூ

166. Flip Book என்பதன் தமிழாக்கம் __________.

(A) கையாவண நூல்

(B) மீயுரை நூல்

(C) புரட்டு நூல்

(D) மென் நூல்

167. முதல் பக்கமே தலையங்கமாக அமைந்திருந்த இதழின் பெயர் __________.

(A) இந்தியா

(B) தேச பக்தன்

(C) விடுதலை

(D) சுதேசமித்திரன்

168. எனக்கு நகைச்சுவை உணர்வு இல்லாவிட்டால் நான் எப்பொழுதோ தற்கொலை செய்து கொண்டிருப்பேன்' - இது யாருடைய கூற்று ?

(A) காந்தியடிகள்

(B) ஜவஹர்லால் நேரு

(C) இரபீந்திரநாத் தாகூர்

(D) இராஜாஜி



Teachingninja.in

169. மொழிநடை தெளிவாக அமைவதற்குப் பயன்படுத்தப்பட வேண்டிய வாக்கிய அமைப்பு :

(A) எதிர்மறை வாக்கியம்

(B) வினா வாக்கியம்

(C) உடன்பாட்டு வாக்கியம்

(D) கலவை வாக்கியம்

170. உலக மொழிகள் அனைத்தையும் கணினியில் உள்ளடக்கும் எழுத்துரு எது ?

(A) ஒருங்குறி

(B) பாமினி

(C) வானவில்

(D) கம்பன்

171. 'நாடோடி இலக்கியம்' எனும் நூலின் ஆசிரியர் யார் ?

(A) ஆறு. அழகப்பன்

(B) கி.வா. ஜெகந்நாதன்

(C) அன்னகாமு

(D) ச. வளவன்

172. தமிழில் முதன்முதலில் தாலாட்டுப் பாடலைப் பாடியவர் யார் ?

(A) ஆண்டாள்

(B) நம்மாழ்வார்

(C) பெரியாழ்வார்

(D) பூதத்தாழ்வார்

173. 'தமிழ்நாட்டு நாடோடிக் கதைகள்' எனும் தொகுப்பினைத் தொகுத்தவர் யார் ?

(A) அரு. இராமநாதன்

(B) கா. அப்பாதுரை

(C) ஆறு. இராமநாதன்

(D) ராஜ நாராயணன்

174. வையந் தருமிவ் வனமன்றி, வாழும் சொர்க்கம் வேறுண்டோ ? எனும் பாடல் வரிகள் எக்கவிதையில் இடம் பெற்றுள்ளது ?

(A) மருமக்கள்வழி மான்மியம்

(B) ஆசிய ஜோதி

(C) உமர் கய்யாம்

(D) குழந்தைச் செல்வம்



Teachingninja.in

175. 'வார்த்தையே மணல், ஓசையே ஜலம்' என்ற கவிதை வரிக்குச் சொந்தக்காரர் யார் ?

(A) வல்லிக் கண்ணன்

(B) வைரமுத்து

(C) ந. பிச்சமூர்த்தி

(D) புவியரசு

176. நமது நாட்டில் முதன்முதலில், தொழில் நுட்பத்தில் சிறந்த 'நேர்படி ஒளிப்பட' அச்சுமுறையைப் பின்பற்றிய பெருமைக்குரிய இதழ் எது ?

(A) தமிழ் மேக்சின்

(B) ஹிந்து

(C) மாசத்தினச் சரிதை

(D) தினவர்த்தமானி

177. ஒரு செய்தியைப்பற்றி ஒருவர், இன்னொருவரிடம் முதலில் எதைச் சொல்லுகின்றாரோ, அதைத்தான் முதலில் கொண்டு வர வேண்டும் என்று வழிக்காட்டியவர் ________.

(A) சி.பா. ஆதித்தனார்

(B) எஸ். கலைவாணி

(C) வ. இந்திராபவானி

(D) கே.எம். பாதுஷா

178. இந்திய மொழி இதழ்களின் தந்தையாகக் கருதப்படுபவர் யார் ?

(A) திரு.வி. கல்யாண சுந்தரனார்

(B) ஜேம்ஸ் பென்னட்

(C) தாமஸ் ஜோன்ஸ்

(D) இராசாராம் மோகன் ராய்

179. தலையங்கத்தைச் 'செய்தித்தாளின் கருத்துக் கண்ணாடி' என்று கூறியவர் யார் ?

(A) ஜான் ஹோஹன் பர்க்

(B) எம்.வி. காமத்

(C) டி.எஸ். மேத்தா

(D) மகாகவி பாரதியார்

180. 'அமிர்த வசனி' எவ்வகை இதழாக வெளி வந்தது ?

(A) ஆன்மீக இதழ்

(B) அரசியல் இதழ்

(C) மகளிர் இதழ்

(D) அறிவியல் இதழ்

- o 0 o -



Teachingninja.in

SPACE FOR ROUGH WORK

Teachingninja.in



Teachingninja.in

SPACE FOR ROUGH WORK



Teachingninja.in

# குறிப்புகள் / INSTRUCTIONS

(கவனமாக படித்து அதன்படி நடக்கவும் / READ CAREFULLY AND COMPLY)

## முக்கிய குறிப்புகள் / IMPORTANT INSTRUCTIONS

**OMR விடைத்தாளில், வினாத் தொகுப்பு வரிசையை அதற்கென தரப்பட்டுள்ள இடத்தில் விண்ணப்பதாரரே சரியாக நிரப்ப வேண்டும்.**

**Candidate alone should fill the Question Booklet Series correctly at the prescribed place in the OMR Answer Sheet.**

1 விண்ணப்பதாரர் தனக்கு அளிக்கப்பட்ட வினாத்தொகுப்பானது தனது பாடத்திற்குரியதா என்பதை சரிபார்த்துக் கொள்ளவும். மாறி இருந்தால் உடனடியாக அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும்.
Candidates should verify the subject of the question paper given to him/her. If the subject is changed inform the Hall Superintendent immediately.

2. குறிப்புகளை முழுவதுமாக படித்துவிட்டு OMR விடைத்தாளில் வரிசை எண் 1 -லிருந்து **16** மற்றும் வினாத்தொகுப்பில் வரிசை எண் 1 -லிருந்து **16** வரையிலான தகவல்களை கவனமாக நிரப்பவும். நீங்கள் குறிப்புகளில் கூறியுள்ளபடி சரியான முறையில் தகவல்களை நிரப்பி, கையொப்பம் இடாவிடில், உங்களது விடைத்தாளை மதிப்பீடு செய்யும் போது ஏற்படும் விளைவுகளுக்கு நீங்களே பொறுப்பாவீர்கள்.
Read Instructions completely and carefully and fill in the details from Sl. No. 1 to **16** in the OMR Answer Sheet and Sl. No. 1 to **16** in the Question Booklet. If you fail to fill in the details and sign as instructed correctly, you will be personally responsible for the consequences arising during scanning of your OMR Answer Sheet.

3. தவறாக பூர்த்தி செய்யப்படும்/செய்யப்படாமல் உள்ள OMR விடைத்தாட்கள் மதிப்பீட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.
OMR Answer Sheets will not be evaluated if the OMR Answer Sheet is filled in wrongly/unfilled.

4. வினாத்தொகுப்பில் OMR விடைத்தாளின் எண்ணை அதற்கென தரப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும்.
OMR Answer Sheet No. should be written in the space provided in the Question Booklet.

5. இந்த வினாத்தொகுப்பானது **180** வினாக்களை **32** பக்கங்களில் கொண்டுள்ளது. வினாத் தொகுப்பினை திறக்குமாறு அறிவுறுத்தப்பட்ட பின்னரே, விண்ணப்பதாரர்கள் வினாத்தொகுப்பின் சீலிடப்பட்ட முத்திரைகளை திறக்க வேண்டும். வினாத் தொகுப்பின் பக்கம் **3** லிருந்து **28** வரை **180** வினாக்கள் இடம் பெற்றுள்ளனவா என சரி பார்க்கவும்.
The Question Booklet comprises of **32** pages having **180** questions. After being instructed to open the Booklet, then only the candidates should open the Question Booklet seals. Check whether the Booklet contains **180** Questions starting from page No. **3** to **28**.

6. அனைத்து வினாக்களும் பல்விடைவகை வினாக்கள். ஒவ்வொரு வினாவிற்கும் ஒரே ஒரு சரியான விடை மட்டுமே உள்ளது. **தவறான விடைகளுக்கு மதிப்பெண்கள் குறைக்கப்பட மாட்டாது.**
All questions are of MCQ (Multiple choice question) type. There is only one correct answer to each question. **There will be no negative marking for wrong answers.**

7. மொழி வினாக்களை கொண்ட பகுதி தவிர அனைத்து வினாக்களும் இரு மொழிகளில் தரப்பட்டுள்ளன. (தமிழ் மற்றும் ஆங்கில பாடங்களைத் தவிர)
All questions other than language questions are in bilingual. (Except Tamil and English Subjects)

8. வினா(க்கள்)இல் தவறுகள் இருப்பின், தேர்வின் போது இந்த வினா(க்கள்) சரி செய்யப்பட மாட்டாது.
In event of any mistake in any question/s, no corrections will be made in the Question/s during the examination.

9. வினாத்தொகுப்பின் இறுதியில், செய்து பார்ப்பதற்கென தனியாக தரப்பட்டுள்ள இடத்திலேயே ROUGH WORK செய்து பார்க்க வேண்டும். இதை வினாத்தொகுப்பிலிருந்து கிழிக்கக்கூடாது. கூடுதல் தாள்கள் எதுவும் வழங்கப்படமாட்டாது.
Rough work, if any, may be done in the Question Booklet only in the space provided at the end of the Booklet. Do not tear it off from the Question Booklet. No additional paper shall be provided.



Teachingninja.in

10. தேர்வு அறையில் மடக்கை அட்டவணை, கால்குலேட்டர், அளவுகோல், மொபைல் தொலைபேசி, பேஜர், டிஜிட்டல் நாட்குறிப்பேடு மற்றும் எந்தவொரு மின்னணு சாதனங்களையும் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. இவற்றை பயன்படுத்தினால் தகுதி நீக்கம் செய்யப்படுவீர்கள்.
Use of Log tables, Calculators, Slide rules, Mobile Phone, Pager, Digital Diary or any other electronic item/ instrument etc. in the examination hall is not allowed. Their use will result in disqualification.

11. வினாத்தொகுப்பினுடன் OMR விடைத்தாளானது தனியாக வழங்கப்படும்.
OMR Answer Sheet will be provided along with Question Booklet separately.

12. வினாத்தொகுப்பானது விண்ணப்பதாரர்களுக்கு 9.50 மு.ப. க்கு வழங்கப்படும். விண்ணப்பதாரர்கள் வினாத் தொகுப்பு மற்றும் OMR விடைத்தாளில் நிரப்ப வேண்டிய விவரங்களை சரியாக நிரப்ப வேண்டும். 10.00 மு.ப. மணிக்கு நீண்ட மணி ஒலிக்கும். அதன் பிறகே சீலிடப்பட்ட முத்திரையை திறக்க வேண்டும். வினாத்தொகுப்பினை திறந்தவுடன் ஏதேனும் பக்கம்/வினா இல்லாமல் இருக்கிறதா அல்லது பக்கங்கள் கிழிந்தோ, சரியாக அச்சு பதிவு ஆகாமலோ இருக்கிறதா, ஒரே பக்கம் திரும்ப திரும்ப வருகிறதா என சரிபார்க்கவும். வினாத் தொகுப்பில், எங்கேயாவது ஏதேனும் குறை இருப்பினும், அதை அறை கண்காணிப்பாளரிடம் தெரிவித்து வினாத் தொகுப்பினை மாற்றிக் கொள்ள வேண்டும். தேர்வு முடிவதற்கான எச்சரிக்கை மணி 1.25 பி.ப.-க்கும், இறுதி மணி 1.30 பி.ப.-க்கும் அடிக்கும்.
The Question Booklet will be issued to the candidates at 9.50 am and the candidates must fill in all entries in Question Booklet and OMR Answer Sheet. Candidates should open the question booklet seal after a long bell at 10.00 am. After opening the Question Booklet, ensure that any page/question is not missing/not printed/torn/ repeated. In case, you find any defect anywhere in the Question Booklet, immediately inform the Room Invigilator and get it replaced by him. Warning Bell will ring at 1.25 pm, and the last long bell will ring at 1.30 pm.

13. தேர்வு எண், OMR விடைத்தாள் எண், வினாத் தொகுப்பு எண், பெயர் மற்றும் கையொப்பம் போன்றவைகளை அதற்கென வினாத் தொகுப்பு மற்றும் OMR விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் நிரப்ப வேண்டும்.
Write your Roll No., OMR Answer Sheet No., Question Booklet Series, Name and put your signature in the space provided in the Question Booklet as well as in the OMR Answer Sheet.

14. ஒவ்வொரு வினாவிலும் A, B, C, D என்று குறிப்பிடப்பட்டுள்ள நான்கு விடைகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாவையும், கவனமாக படித்து, உங்களுக்கு சரியானது என கருதும் விடையினை தேர்ந்தெடுக்கவும். OMR விடைத்தாளில் அவ்வினாவிற்கென தரப்பட்டுள்ள இடத்தில் சரியான வட்டத்தை நிழலிடுவதன் மூலம் உங்களது விடையை குறிப்பிடவும். நிழலிடுவதற்கென கருமைநிற பந்துமுனை பேனாவினை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
With each question, you will find four possible answers, marked by the letters A, B, C and D. Read each question carefully, and find out which answer, according to you is correct. Indicate your answer by darkening the appropriate circle completely in the OMR Answer Sheet corresponding to the question. For marking answer, use Black Ball Point pen only.

15. OMR விடைத்தாளானது கணினி மூலம் மதிப்பீடு செய்யப்படும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய குறிப்புகளை கடைபிடிக்காவிடில், கணினி மூலம் மதிப்பீடு செய்வது இயலாததாகிவிடும். இதனால் விண்ணப்பதாரருக்கு ஏற்படும் இழப்புகளுக்கு விண்ணப்பதாரரே பொறுப்பாவார்.
OMR Answer Sheet is designed for computer evaluation. If you do not follow instructions given above and shown in the OMR Answer Sheet, evaluation by computer will become difficult. Any resultant loss to the candidate on the above account, shall be of the candidate only.

16. இறுதி மணி ஒலிப்பதற்கு முன் எந்தவொரு விண்ணப்பதாரரும் தேர்வு அறையை விட்டு வெளியேறக் கூடாது. தேர்வு அறையை விட்டுச் செல்லும் முன்பு OMR விடைத்தாளை அறை கண்காணிப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். வினாத் தொகுப்பினை விண்ணப்பதாரரே எடுத்துச் செல்லலாம்.
No candidate should leave the examination hall before the final bell. The OMR Answer Sheet should be handed over to the Room Invigilator before leaving the examination hall. The candidate is allowed to take the Question Booklet with him/her.


Teachingninja.in

**DIRECT RECRUITMENT OF GRADUATE TEACHERS BLOCK RESOURCE TEACHER EDUCATORS BRTE - 2023**

**TENTATVE KEY ANSWERS**

**Subject: TAMIL** **Date of Exam - 04.02.2024**

| Set A question No. | Key Answers |
|---|---|
| 1 | D |
| 2 | C |
| 3 | D |
| 4 | A |
| 5 | D |
| 6 | C |
| 7 | B |
| 8 | B |
| 9 | A |
| 10 | C |
| 11 | C |
| 12 | B |
| 13 | A |
| 14 | A |
| 15 | B |
| 16 | C |
| 17 | B |
| 18 | B |
| 19 | D |
| 20 | D |
| 21 | C |
| 22 | C |
| 23 | B |
| 24 | A |
| 25 | C |
| 26 | B |
| 27 | B |
| 28 | B |
| 29 | B |
| 30 | B |



Teachingninja.in

**DIRECT RECRUITMENT OF GRADUATE TEACHERS BLOCK RESOURCE TEACHER EDUCATORS BRTE - 2023**

**TENTATVE KEY ANSWERS**

**Subject: TAMIL** **Date of Exam - 04.02.2024**

| Set A question No. | Key Answers |
|---|---|
| 31 | D |
| 32 | B |
| 33 | B |
| 34 | B |
| 35 | A |
| 36 | B |
| 37 | D |
| 38 | A |
| 39 | C |
| 40 | B |
| 41 | D |
| 42 | C |
| 43 | A |
| 44 | B |
| 45 | A |
| 46 | C |
| 47 | A |
| 48 | C |
| 49 | B |
| 50 | C |
| 51 | D |
| 52 | B |
| 53 | D |
| 54 | D |
| 55 | A |
| 56 | C |
| 57 | B |
| 58 | B |
| 59 | B |
| 60 | D |



Teachingninja.in

**DIRECT RECRUITMENT OF GRADUATE TEACHERS BLOCK RESOURCE TEACHER EDUCATORS BRTE - 2023**

**TENTATVE KEY ANSWERS**

**Subject: TAMIL** **Date of Exam - 04.02.2024**

| Set A question No. | Key Answers |
|---|---|
| 61 | C |
| 62 | C |
| 63 | B |
| 64 | C |
| 65 | A |
| 66 | B |
| 67 | C |
| 68 | C |
| 69 | A |
| 70 | A |
| 71 | A |
| 72 | A |
| 73 | A |
| 74 | A |
| 75 | D |
| 76 | B |
| 77 | A |
| 78 | B |
| 79 | B |
| 80 | D |
| 81 | D |
| 82 | A |
| 83 | A |
| 84 | B |
| 85 | A |
| 86 | C |
| 87 | A |
| 88 | A |
| 89 | D |
| 90 | B |



Teachingninja.in

**DIRECT RECRUITMENT OF GRADUATE TEACHERS BLOCK RESOURCE TEACHER EDUCATORS BRTE - 2023**

**TENTATVE KEY ANSWERS**

**Subject: TAMIL** **Date of Exam - 04.02.2024**

| Set A question No. | Key Answers |
|---|---|
| 91 | C |
| 92 | B |
| 93 | D |
| 94 | D |
| 95 | B |
| 96 | D |
| 97 | A |
| 98 | A |
| 99 | D |
| 100 | A |
| 101 | B |
| 102 | C |
| 103 | D |
| 104 | C |
| 105 | C |
| 106 | B |
| 107 | A |
| 108 | A |
| 109 | A |
| 110 | B |
| 111 | C |
| 112 | A |
| 113 | A |
| 114 | C |
| 115 | C |
| 116 | D |
| 117 | A |
| 118 | A |
| 119 | A |
| 120 | A |



Teachingninja.in

**DIRECT RECRUITMENT OF GRADUATE TEACHERS BLOCK RESOURCE TEACHER EDUCATORS BRTE - 2023**

**TENTATVE KEY ANSWERS**

**Subject: TAMIL** **Date of Exam - 04.02.2024**

| Set A question No. | Key Answers |
|---|---|
| 121 | B |
| 122 | C |
| 123 | A |
| 124 | A |
| 125 | C |
| 126 | B |
| 127 | C |
| 128 | C |
| 129 | A |
| 130 | C |
| 131 | B |
| 132 | C |
| 133 | B |
| 134 | B |
| 135 | B |
| 136 | D |
| 137 | C |
| 138 | D |
| 139 | A |
| 140 | C |
| 141 | B |
| 142 | A |
| 143 | A |
| 144 | B |
| 145 | C |
| 146 | A |
| 147 | A |
| 148 | A |
| 149 | C |
| 150 | A |



Teachingninja.in

**DIRECT RECRUITMENT OF GRADUATE TEACHERS BLOCK RESOURCE TEACHER EDUCATORS BRTE - 2023**

**TENTATVE KEY ANSWERS**

**Subject: TAMIL** **Date of Exam - 04.02.2024**

| Set A question No. | Key Answers |
|---|---|
| 151 | C |
| 152 | C |
| 153 | A |
| 154 | A |
| 155 | B |
| 156 | A |
| 157 | A |
| 158 | B |
| 159 | A |
| 160 | A |
| 161 | D |
| 162 | B |
| 163 | A |
| 164 | D |
| 165 | A |
| 166 | C |
| 167 | A |
| 168 | A |
| 169 | C |
| 170 | A |
| 171 | B |
| 172 | C |
| 173 | D |
| 174 | C |
| 175 | C |
| 176 | B |
| 177 | A |
| 178 | D |
| 179 | B |
| 180 | C |



Teachingninja.in